தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1979 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) தகவல் கோரல்.

(அ) எதிர்க் கட்சித் தலைவர்கள் யாரும் அவையில் இல்லாதது குறித்து.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையில் யாருமே இல்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லாவிட்டால் பரவா யில்லை. அமைச்சர்கள் வரிசையில் தான் இல்லாமல் இருக்கக் கூடாது.

(2) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள நலப்பள்ளிகளில் உள்ள பகுதி நேர ஊழியர்களது ஊதியம்.

குறுகிய கால வினா எண். 10—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட அரிசன நலத்துறையின் பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு ஊதியக்குழு அறிக்கைப் படி ஊதியம் வழங்கப்படுகிறதா ?

(ஆ) இல்லையெனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) தஞ்சை மாவட்ட அரிசன நலப்பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு மூன்றாவது ஊதியக்குழுவின் அறிக்கையின்படி ஊதியம் வழங்கப்படவில்லை.

(ஆ) பகுதி நேர ஆசிரியர்கள் முன்னர் வாங்கி வந்த ஊதி யத்தைவிட தற்போது மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரை யின்மேல் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் குறைவாக உள்ளதால் புதிய ஊதியப்படி ஊதியம் வழங்கப்படவில்லை.

[1979 மார்ச் 10

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேர ஆசிரியர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற ஊதியத்தைவிட ஊதியக்குழுவின் பரிந்துரை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி குறைவாக கொடுக்க வேண்டிய பரிந்துரையை ஏற்காமல், அவர்களுக்கு அதிகமாக ஊதியம் வழங்க அரசு முன் வருமா? அரசு ஊழியர்கள், பகுதி நேர ஊழியர்கள் ஆகியவர்களுக்கு 20 ரூபாய் அதிகமாகி இருக்கிறது, ஆனால் கொடுக்கப்படவில்லை என்று தான் புகார் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்வது போல் சொல்வது இல்லை. அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கு தற்போது நிலையான ஊதியம் ரூ. 60, பணியிட ஊதியம் ரூ. 20 என்று ஆக மொத்தம் ரூபாய் 80 பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த ரூபாய் 80-ஐ உயர்த்த வேண்டுமா வேண்டாமா என்பதற்கு ஊதியக் குழு எந்தக் கருத்தும் சொல்லவில்லை. ஊதிய விகிதத்தில் மாறுபாடு இருக்குமானால், அதை நிதித்துறையோடு கலந்து பேசி, அவர்களுடைய ஒப்புதலோடு தான், இந்தத் துறை வழங்கமுடியும். ஆகவே, மாவட்ட நல அதிகாரி, நெறியாளருக்கு எழுதி இருக்கிறார். நெறியாளர் அரசுக்கு எழுதி இருக்கிறார். நிதித்துறையிடம் கலந்து பேசி அது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, அரிசன நலத்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள், வார்டன்கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோருக்கு சம்பளம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக கூறப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இதர பணியாளர்களுக்கு இந்த அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பு மாவட்டத்தில் தலைமையிடத்தில் தான் ஊதியம் வழங்கப்பட்டது. பல்வேறு வட்ட பகுதிகளில் உள்ள ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்ததால் கால தாமதம் ஏற்பட்டது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, என்னுடைய கவனத்திற்கு ஆசிரியர்களாலும், மற்றவர்களாலும் கொண்டு வந்தபோது, ஒவ்வொரு மாதமும் 1-ம் தேதியே சம்பளம் வழங்கவேண்டும் என்று இந்த அரசாங்கம் ஆணையிட்டு, அந்தந்த வட்ட அலுவகலங்களிலே டிசம்பர் மாதம் முதல் அப்படி வழங்கப்பட்டு வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 60 பிளஸ் 20 ரூ. 80 கொடுக்கப்படுகிறது

1979 மார்ச் 10]

என்று சொன்னார்கள். அது பற்றி ஊதியக் குழு பரிந்துரை எதுவும் இல்லை என்றும் சொன்னார்கள். பரிந்துரை ஏதும் சொல்லப் படவில்லை என்பதற்காக அதிகம் கொடுக்காமல் இருக்கக்கூடாது. அங்கே பணியாற்றுகிறவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப் பட்டவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் அவர் களுக்குத் தேவையான அளவிற்கு ஊதியத்தை வழங்க, குறைந்த பட்சம் ரூ. 450 முதல் 500 வரை வழங்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, 3-வது ஊதியக் குழு எவ்வளவு நிர்ணயித்து இருக் கிறதோ அதை வழங்கத்தான் இந்தத் துறைக்கு அதிகாரம் இருக் கிறது. அதிலே வேறுபாடு இருக்குமானால் துறைத் தலைவர்கள் அரசாங்கத்திற்கு எழுதி, ஒப்புதல் பெற்று, பிறகுதான் அந்த வேறுபாட்டை நீக்கவேண்டும் என்பது விதி முறை. அதைப் பின் பற்றி துறை அரசுக்கு எழுதி இருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்து எது நியாயமோ அதைத் தருவதற்கு தயாராக இருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு ஊதியக்குழு பரிந்துரை செய்துள்ள சம்பளம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது தற்போது கொடுப்பதை விட அதிகமாக யிருக்கிறது. அதனை ஓரிரு ஊராட்சி ஒன்றியங்களில் தான் நிறை வேற்றவில்லை. ஆனால் நம்முடைய அரிசன நல ஊழியர் களுக்கு அதிகப்படுத்தப்படவில்லை. அங்கேயுள்ள அலுவலர்கள் கொடுக்காததுதான் பிரச்னையே தவிர, ஊதியக்குழு சிபார்சு செய்யவில்லை என்பது பிரச்னை அல்ல. ஆகவே, மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் நிதித்துறையோடு பேச வேண்டும் என்று சொன்னார்கள். அரிசன நலத்துறை இலாகா நிதித்துறை யோடு எந்த அளவிற்கு தொடர்பு வைத்துள்ளது என்பது எல் லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, அதை வலியுறுத்தி உடனடியாக அவர்களுக்கு அதிகமாக்கித் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத் திற்கும் இந்தத் துறைக்கும் இருக்கும் தொடர்பைக் குறிப்பிட் டார்கள். எல்லாத் துறைக்கும் ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கிறது என்பது உண்மை. ஆனால் ஊதியக் குழு ஏற்கெனவே இருக்கிற ஊதியம் எவ்வளவு, மாற்றியமைக்கப்பட்ட ஊதியம் எவ்வளவு என்று வரையறை செய்து நிர்ணயித்திருக்கிறது. வரை யறை செய்யப்பட்டதில் இருக்கிற குறைபாட்டைப் போக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அந்தத் துறை அரசைக் கேட்க வேண்டும். அதிலேதான் பிரச்சனை. துறைக்கும்

[1979 மார்ச் 10

துறைக்கும் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. இந்தத் துறைக்கும் நிதித் துறைக்கும் பிரச்னை இல்லை; இருந்தால் அதை அப்போது அவசியம் இந்த அவையில் தெரிவிக்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்த அரிசன நலத் துறைப் பள்ளிகளில் அரிசனங்கள்தான் பகுதி நேர பணியாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மிகவும் வறுமைப்பட்டவர்கள். ஆகவே, அவர்களுடைய வறுமையைப் போக்கும் வகையில் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இந்தத் துறை நிதித் துறைக்கு என்ன சிபாரிசை, சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இதிலே பணியாற்றுகின்ற அத்தனை பேர்களும் தாழ்த்தப்பட்ட மக்கள்தான் என்று சொல்ல முடியாது. ஆரம்பக் காலத்தில் பல்வேறுபட்ட வகுப்பினர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது இருக்கிற பிரச்சனை ஊதியக் குழு செய்திருக்கிற வரன்முறையில இருக்கிற குறைபாட்டை நீக்குவதற்கு என்ன செய்யலாம் என்று துறை அரசுக்கு எழுத வேண்டும். அதன்பிறகு அவர்கள் எவ்வளவு தரலாம் என்று முடிவு செய்து, இப்போது இருக்கிற வேறுபாட்டையும் குறைபாட்டையும் போக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 80 ரூபாய் சம்பளம் தருவதாகச் சொன்னார்கள். அவர்கள் பகுதி நேர ஆசிரியர்கள் என்பதால் 80 ரூபாய் தரப்படுகிறது. பெரும்பாலும் அங்கே இருக்கிறவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். அது மட்டுமல்ல, அவர்கள் எல்லாம் தொழில் ஆசிரியர்கள். கிராமப்புறங்களில் இருக்கின்ற தொழில் நல்லமுறையில் வளர்ச்சியடைவதற்கு அவர்களை எல்லாம் முழு நேர ஆசிரியர்களாக நியமித்தால் அவர்களுடைய ஊதியத்தையும் கூட்டிக் கொடுக்கலாம். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பரிசீலிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, அரிசன நலப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களுக்கு 80 ரூபாய்தான் கொடுக்க ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற விலைவாசி ஏற்றத்தைப் பார்த்தால் இது போதாது. யூனியனில் 'வாச்மேன்' வேலை பார்ப்பவர்களுக்கு கூட 200 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இந்த நேரத்தில்

[1979 மார்ச் 10]

80 ரூபாய் சம்பளம் போதுமா என்பதை யோசித்து, அரசாங்கமே அந்த பள்ளிகளை தன் பொறுப்பில் ஏற்று, அவர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுக்க, சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர வர்களே, 80 ரூபாய் வழங்குவதாக நான் சொல்லவில்லை. 80 ரூபாய் வழங்குகிறவர்களுக்கு சம்பளக் கமிஷன் எவ்வளவு ஊதியம் தரவேண்டுமென்று நிர்ணயம் செய்யவில்லை. அதனால்தான் குறைபாடு இருக்கிறது. இப்போது மூன்று நிலைகளில் தரப்படுகின்ற சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். 60 ரூபாயாக இருந்ததை 75 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். 30 ரூபாயாக இருந்ததை 45 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். 90 ரூபாயாக இருந்ததை 100 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இந்த இடையிலே இருக்கிற சிக்கல் காரணமாக இந்த வினா எழுந்திருக்கிறது.

பினாமி நிலங்களை மேற்கொள்ளும் திட்டம்.

*வினா எண் 318.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பினாமி நிலங்களை எடுத்து நிலமில்லா ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

(ஆ) இதுவரை எவ்வளவு நிலம் எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டது ? மாவட்ட வாரியாக?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) (ஆ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்ற பல்லாண்டு காலமாகவே ஒவ்வொரு அமைச்சரும் பினாமி நிலங்களை எடுக்கப் போகிறோம், ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப் போகிறோம் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போன்று சென்ற ஆண்டு நமது முதலமைச்சர் அவர்கள்கூட இந்த பினாமி நிலங்களை எடுத்துக் கொடுக்கப் போகிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த பினாமி நிலங்களை நீங்கள் எடுப்பதற்குள்ளாக அது அனாமதேய பேர்வழிகளிடம் மாறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை உணர்ந்து, அதை உடனடியாக எடுத்துக் கொடுப்பதற்கு